# மக்களவையில் ராகுல் காந்தி ஆவேச உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

காந்தி இறந்து விட்டதாகவும், ஆவணப் படம் மூலமே காந்தியை, உலகம் அறிந்ததாகவும் மோடி கூறுகிறார்.

பரமாத்மா மோடியின் ஆத்மாவுடன் நேரடியாக பேசுவார். நாம் மனிதர்கள். நாம் உயிரியல் ரீதியாக பிறந்தவர்கள். நமக்கு பிறப்பு, இறப்பு உண்டு. ஆனால் பிரதமர் மோடி தெய்வீக சக்தியால் வந்தவர்.

நாட்டில் மதங்களும் மத குருமார்களும் அகிம்சையைதான் போதித்து வந்ததாகவும், ஆனால், அன்பை போதிக்கும் இந்து மதம் குறித்து, பா.ஜ.க.வினர் 24 மணி நேரமும் வெறுப்பை பரப்பி வருவதாகவும் குற்றம் சாட்டினார்.

ராமர் பிறந்த அயோத்தியிலேயே பா.ஜ.க.வுக்கு மக்கள் பாடம் புகட்டியதே இதற்கு சிறந்த உதாரணம்.

நான் கவனித்த இன்னொரு விஷயம், ஒரு மதம் மட்டுமே தைரியத்தை கூறவில்லை. அனைத்து மதங்களும் தைரியத்தைப் பற்றி பேசுகின்றன. இஸ்லாம், சீக்கியம் என அனைத்து மதங்களும் தைரியத்தை வலியுறுத்துகின்றன. உண்மையான இந்து தர்மத்தை பா.ஜ.க.வினர் பின்பற்றவில்லை. பா.ஜ.க.வினர் சகிப்புத்தன்மை இல்லாத இந்துக்கள். பிரதமர் மோடியும், பா.ஜ.க.வும் மட்டுமே ஒட்டுமொத்த இந்துக்கள் கிடையாது. (அயோத்தி பற்றி பேசத் தொடங்கியதும் மைக் அணைக்கப்பட்டது ஏன்?)

(மத நல்லிணக்கம் குறித்து ராகுல் காந்தி பேசும் போது பிரதமரும், உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் குறுக்கிட்டு பேசினர் ;

மக்களவை தேர்தலில் அயோத்தியில் வெற்றிபெற்ற சமாஜ்வாதி எம்.பி. அவதேஷுக்கு அவையிலேயே கைகுலுக்கி பாராட்டினார் ராகுல் காந்தி). “ராமர் பிறந்த அயோத்தியிலேயே பா.ஜ.க.வுக்கு மக்கள் பாடம் புகட்டிவிட்டனர். அயோத்தியில் தேர்தலில் போட்டியிட நரேந்திர மோடி இரண்டு முறை சர்வே நடத்தினார். ஆனால், அயோத்தியில் தேர்தலில் போட்டியிடாதீர்கள், அயோத்தி மக்கள் உங்களைத் தோற்கடிப்பார்கள் என்று கருத்துக் கணிப்பை நடத்தியவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். அதனால் தான் நரேந்திர மோடி அங்கிருந்து சென்று வாரணாசியில் போட்டியிட்டார்”.

மோடி ஜி, தயவு செய்து எழுதி வைத்துக் கொள்ளுங்கள். இந்த முறை குஜராத்தில் இண்டியா கூட்டணி உங்களை தோற்கடிக்கப் போகிறது.

சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டதுக்கு நானும் கை கொடுத்தேன். பிரதமர் மோடியும் கை கொடுத்தார். நான் கை கொடுத்த போது நிமிர்ந்து நின்று கை கொடுத்த நீங்கள் ஓம்.பிர்லா , பிரதமர் கை கொடுக்கும்போது குனிந்து கை கொடுத்தீர்கள் சபாநாயகர் அரசியல் சார்பு இல்லாமல் செயலாற்ற வேண்டும்.

**சபாநாயகர் ஓம் பிர்லா:** பெரியவர்கள் முன் பணிந்து, சமமானவர்களுடன் சரிநிகராக கைகுலுக்க எனது கலாச்சாரம் எனக்குக் கற்றுக்கொடுத்துள்ளது. அதனைதான் நான் பின்பற்றினேன்.

**ராகுல் காந்தி:** உங்கள் வார்த்தைகளை நான் மதிக்கிறேன், ஆனால் இந்த அவையில் சபாநாயகரை விட பெரியவர்கள் யாரும் இல்லை.

### அக்னி வீரர் திட்டம் மோடிக்கான திட்டம்!

அக்னிவீரர் திட்டம் ராணுவத்துக்கான திட்டமல்ல; மோடிக்கான திட்டம். இத்திட்டத்தை உருவாக்கியது ராணுவம் அல்ல. பிரதமர் மோடிதான். அக்னிவீரர் திட்ட வீரர்களின் உயிரிழப்பை வீர மரணங்களாக பா.ஜ.க. அரசு ஏற்குமா? ‘USE AND THROW’ முறையில் ராணுவத்திற்கு ஆள்சேர்க்கும் முறைதான் அக்னிபாத் திட்டம்.

### மணிப்பூருக்கு பிரதமர் செல்லாதது ஏன்?

மணிப்பூர் இந்தியாவின் ஒரு பகுதி இல்லையா? அங்கு ஏன் பிரதமர் மோடி செல்லவில்லை. பிரதமர் மோடியையும், அமித் ஷாவையும் பொறுத்தவரை மணிப்பூர் ஒரு மாநிலமே இல்லை. ராமர் கோயில் திறப்பு விழாவிற்கு அயோத்தி மக்களுக்கு அழைப்பு இல்லை. அம்பானி மற்றும் அதானிக்கே அழைப்பு விடுக்கப்பட்டது. அயோத்தி மேம்பாட்டு திட்டத்துக்காக அங்குள்ள ஏராளமான மக்களின் நிலங்கள் பறிக்கப்பட்டது. ஆனால் அதற்கான இழப்பீடு வழங்கப்படவில்லை.

பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மீது திட்டமிட்டு தொடர்ந்து தாக்குதல் நடத்தப்படுகிறது. திட்டமிட்டே தனது மக்களவை உறுப்பினர் பதவி மற்றும் அரசு இல்லத்தை பறிமுதல் செய்தனர். அமலாக்கத்துறை அதிகாரிகள் தம்மிடம், 20 மணிநேரம் விசாரணை நடத்தினர்.

### உண்மை பேசுவதை நிறுத்தப்போவதில்லை!

எக்காரணம் கொண்டும் உண்மை பேசுவதை நிறுத்தப் போவதில்லை. இந்திய அரசியலமைப்பை காப்பதில் “இந்தியா” கூட்டணி உறுதியாக உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் அரசியல் சாசனம் மீது திட்டமிட்ட தாக்குதல் நடைபெற்று வருகிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசிடமிருந்து அரசியலமைப்பை பாதுகாத்து வருகிறோம். விசாரணை அமைப்புகள் அனைத்தும்மோடியின் ஆணைப் படியே செயல்படுகின்றன.

### ‘‘நீட்’’ தேர்வு வியாபாரத் தேர்வு!

பணக்கார குழந்தைகளுக்காகதான் ‘நீட்’, நெட் தேர்வுகள் கொண்டுவரப்பட்டுள்ளது. ‘நீட்’ தேர்வு பணக்காரர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளதே தவிர திறமையானவர்களுக்காக கிடையாது. மாணவர்களும், பெற்றோர்களும் ‘நீட்’ தேர்வு மீது நம்பிக்கையை இழந்துள்ளனர்.

மருத்துவப்படிப்புகளுக்கான ‘நீட்’ நுழைவுத்தேர்வு வணிகமயமாகிவிட்டது. பணம் இருந்தால் தான், மருத்துவப்படிப்பு என்ற நிலை தற்போது உருவாகி உள்ளது. பா.ஜ.க ஆட்சியில் 70க்கும் மேற்பட்ட கேள்வி தாள் கசிவு சம்பவங்கள் நடைபெற்றுள்ளது. ‘நீட்’ தேர்வு முறைகேடுகள் குறித்து விவாதிக்க நாடாளுமன்றத்தில் அனுமதி அளிக்கப்படுவதில்லை.

‘நீட்’ என்பது தொழில் முறை தேர்வு அல்ல, ‘நீட்’ ஒரு கமர்சியல் தேர்வு ‘நீட்’ தேர்வின் மூலம் பயிற்சி மையங்கள் கோடிக்கணக்கில் வருவாய் ஈட்டுகிறது. ‘நீட்’ தேர்வில் 22 சதவீதம் மதிப்பெண் எடுத்தாலே தேர்ச்சி பெற்றதாக அறிவிக்கப்படுவதால் லட்சக்கணக்கான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உரையாற்றினார்.

# மக்களவையில் ஆ.இராசா உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

வடக்கு - தெற்கு என்று பல பேதங்கள் பேசப்படும் இந்த தேசத்தில் முதல்முறையாக திராவிடக் கருத்தியலை ஏற்றுக் கொண்டு உத்தரப்பிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான் ஆகிய வடமாநிலங்களிலேயும் பா.ஜ.க.வுக்கு எதிராக மக்கள் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தக் குடியரசுத் தலைவர் உரையில் கற்பனை வாதத்தோடு கட்டமைக்கப்பட்ட புதிய நம்பிக்கைகளை - வேலை இல்லாத் திண்டாட்டம், பெருகிவரும் ஏழ்மை, பெட்ரோல் - டீசல் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு உள்ளிட்ட - நாங்கள் எழுப்பிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நீங்கள் என்ன நம்பிக்கையை இதுவரை வழங்கியிருக்கிறீர்கள், இந்தப் புதிய வாக்குறுதியை நாங்கள் நம்புவதற்கு !

இன்னொரு மிகப்பெரிய வேடிக்கை; அரசியல் சட்டத்தை ஆட்சி அதிகாரத்துக்கு மட்டுமல்லாமல், பொதுமக்களின் விழிப்புணர்வுக்கான சாதனமாக மாற்றப் போகிறோம் என்று அறைகூவல் விடுத்திருக்கிறீர்கள். அரசியல் சட்டத்தைப் பற்றிப் பேச உங்களுக்கு என்ன அருகதை இருக்கிறது?

### சமதர்மத்தை நீங்கள் மதித்ததுண்டா?

அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள ஜனநாயகத்தை நீங்கள் மதித்தது உண்டா? அரசமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள சமதர்மத்தை நீங்கள் மதித்ததுண்டா? மதச் சார்பின்மையை நீங்கள் மதித்ததுண்டா? குடியரசுத் துணைத் தலைவர், அரசியல் சட்டத்தின் அடிப்படைப் பண்புகளை மாற்ற வேண்டும் என்று கொக்கரிக்கிறாரே, அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டும் என்கிற நீங்கள், அரசியல் சட்டத்தைத் தொட்டு வணங்குவது யாரை ஏமாற்ற?

இந்த நேரத்தில், தமிழ்நாட்டின் சார்பில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

‘நீட்’ குறித்து இங்கு ராகுல் காந்தி அவர்கள் விரிவாகப் பேசியிருக்கிறார். முதன்முதலாக தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட்டபோது, தகுதி பற்றியும் திறமை பற்றியும் கூப்பாடு போட்டவர்கள் யார்? நீங்கள்தானே! உங்கள் முன்னோர்கள்தானே! இன்று ‘நீட்’டில் தகுதியும் திறமையும் எங்கே போயிற்று?

### இதுதான் உங்கள் சமூக நீதியா?

வசதி இருந்தால் ‘மேனேஜ்மெண்ட் கோட்டா’ என்கிற, நிர்வாக இடஒதுக்கீட்டில் குறைந்த மதிப்பெண் பெற்றவர்களும் இடம் பெறுகிறார்கள். அதிக மதிப்பெண் பெற்ற ஏழைகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். இதுதான் உங்கள் சமூக நீதியா?

கடந்த 10 ஆண்டு கால உங்களின் ஆட்சியில் இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், மலைவாழ் மக்களுக்கு எதிரான வெறுப்புணர்வை விதைத்து தேர்தல் அறுவடை செய்தீர்கள். பிரதமர் அவர்கள், இஸ்லாமியர்களின் வருகையை, “ஆயிரம் ஆண்டு காலத்திற்கு முந்தைய அடிமைத் தனம்” என்று குறிப்பிடுகிறார். இஸ்லாமியர்களை, “அந்நியர்” என்கிறார். காந்தியும் - நேருவும் வெள்ளையர்களைக் கொண்டு இங்கு ஆட்சி நடத்திய பிரிட்டிஷ்காரர்களை அந்நியர் என்றார்கள். நான் இந்த அவைக்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

நீங்கள் இஸ்லாமியர்களை அந்நியர்கள் என்று அடையாளப் படுத்துவீர்களானால், இந்து மதத்தில் இன்றைக்கு இருக்கும் உயர் ஜாதிக்காரர்களான ஆரியர்களும் அந்நியர்கள்தான். அம்பேத்கர் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார். “இந்தியாவை யாரேனும் சொந்தம் கொண்டாடவிரும்பினால், அதற்குத் தகுதி உள்ளவர்கள். திராவிடர்கள் மட்டுமே” என்று கூறினர். மறந்து விடாதீர்கள்.

இன்னொன்று சாதிவாரிக் கணக்கெடுப்பு. நீங்கள் மதத்தை முன்வைத்து அரசியல் நடத்துகிறீர்கள். ‘இந்து மதம் என்பது, சாதிகளின் தொகுப்பு’ என்று அம்பேத்கர் கணித்தார். தந்தை பெரியார் அவர்கள், அதனை ஒழிக்கப்பாடுபட்டார்.

ஒரு சமுதாயத்திற்கு வேண்டிய அனைத்துப் பொருள்களையும் ஒரு தனி மனிதன் உற்பத்தி செய்ய முடியாது. நான் போட்டிருக்கிற சட்டைக்கு எங்கோ ஒருவர் பருத்தியை விதைக்க வேண்டும். பின்னர் அந்தப் பருத்தியை வேறு ஒருவர் நெய்து தர வேண்டும். பிறகு எனக்காக ஒருவர் துணியை சட்டையாகத் தைத்துத் தர வேண்டும். இவைகள் எல்லாம் உலகளாவிய தொழில்கள். ஆனால் இந்தியாவில் மட்டும்தான் இந்துமதம் தொழிலைப் பிரிப்பதற்குப் பதிலாக தொழிலாளர்களைப் பிரித்து சாதியாக்கியது.

இன்றைக்கு ஏன் ஒரு துப்புரவுத் தொழிலாளி பரம்பரை பரம்பரையாக; ஏன் பரம்பரை பரம்பரையாக ஒரு தச்சர், ஏன் பரம்பரை பரம்பரையாக கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். உயர்ந்தவர் - பிராமணர் உழைப்பில்லாமல் வாழ்கிறார். இவைகளை எல்லாம் கணக்கில் எடுத்து கல்வி - வேலை வாய்ப்பில், பொருளாதாரத்தில் சாதி காரணமாக பின்தங்கிய மக்களுக்கு முன்னேற்றம் வழங்குவதுதான் சாதி வாரிக் கணக்கெடுப்பின் நோக்கம். அதை நிறைவேற்ற எங்கள் முதல்வர் உள்ளிட்ட பல அரசியல் கட்சிகளின் தலைவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். ஆனால் இந்த உரையில் அதுகுறித்து எதுவும் இடம் பெறவில்லை.

நிறைவாக உங்களுக்கு ஒரு அறிவுரை கூற விரும்புகிறேன்.

இந்த ஆட்சி நீடிக்க வேண்டும் என்றால், உங்களுக்கு சந்திரபாபு நாயுடுவும், நிதிஷ்குமாரும் நிர்பந்திக்கப்பட்ட கூட்டாளிகளாக இருக்க வேண்டும். ஆனால் இந்திய மக்களின் மனங்களை ஆள வேண்டுமானால் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை வலியுறுத்தும் அரசியல் சட்டத்தைச் சார்ந்திருக்க வேண்டும். இல்லையேல், விரைவாகவோ அல்லது கால தாமதமாகவோ நீங்கள் ஆட்சியில் இருந்து தூக்கியெறியப்படுவீர்கள்.

இவ்வாறு மக்களவையில் ஆ.ராசா உரையாற்றினார்.

## திருக்கோவிலூர் தொடக்க வேளாண்மை வங்கியைப் பிரித்து

# உளுந்தூர்பேட்டை வட்ட தலைமையிடத்தில் புதிய வங்கி துவக்கப்படுமா?

## பேரவையில் ஏ.ஜெ.மணிக்கண்ணன் வினா!

**சென்னை, ஜூலை 3-**

**பேரவையில் உளுந்தூர் பேட்டைத் தொகுதி உறுப்பினர் ஏ.ஜெ.மணிக்கண்ணன் கேள்வியும் அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பதிலும் வருமாறு:-**



**ஏ.ஜெ.மணிக்கண்ணன்:** உளுந்தூர்பேட்டை தொகுதி, திருக்கோவிலூர் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியைப் பிரித்து உளுந்தூர்பேட்டை வட்ட தலைமையிடத்தில் புதிய வங்கி துவக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன்**, உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை வட்ட தலைமையிடத்தில் திருக்கோவிலூர் பகுதியிலிருந்து பிரித்து புதிய கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**ஏ.ஜெ.மணிக்கண்ணன்:** உளுந்தூர்பேட்டை வட்டப் பகுதியில் கூட்டுறவு வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கி புதிய கிளை திறப்பதற்கு 1999 ஆம் ஆண்டு முன்மொழிவுகளெல்லாம் அனுப்பப்பட்டு, திருக்கோவிலூர் வங்கியிலிருந்து பிரிப்பதற்கு அவர்கள் தீர்மானங்கள் எல்லாம் வழங்கி, வேண்டிய முன்மொழிகளெல்லாம் அனுப்பப்பட்டிருக்கின்றது.

அதனை மறுபரிசீலனை செய்துத் தருவதற்கும், உளுந்தூர்பேட்டை பகுதியில் உழவர் பணி கூட்டுறவுச் சங்கம் ஒன்று இயங்கிக் கொண்டிருக்கிறது. அது தற்போது வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கமாக மாறப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. ஏறக்குறைய அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் 22 கிராமப் பஞ்சாயத்துகள், ஒரு நகராட்சிப் பகுதியும் அதில் பயன்படக் கூடிய வகையில் வேளாண்மைக் கூட்டுறவு வங்கி இயங்கிக் கொண்டிருக்கிறது. அதனை இரண்டாகப் பிரிப்பதற்கு அரசு முன்வருமா?

**அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன்:** கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் சரகம், திருக்கோவிலூர் ஒன்றியத்தில் செயல்பட்டு வரும் II68திருக்கோவிலூர் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, திருக்கோவிலூர் மற்றும் உளுந்தூர்பேட்டை வட்டங்களை விவகார எல்லையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. மேலும், உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை வட்டத்தில் 19 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களும், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்றும் உளுந்தூர்பேட்டையில் செயல்பட்டு வருகின்றன.

மேற்படி வங்கியில் உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை வட்டத்தில் உள்ளவர்கள் இந்த 19 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களும், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் கிளை ஆகியவற்றில் நகைக் கடன், பயிர்க் கடன் போன்றவற்றை பெற்றுக் கொள்ளலாம். கால்நடை பராமரிப்புக் கடனைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகவே, பல்வேறு கடன்கள் குறைந்த வட்டி விகிதத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது. ஆகவே, புதிய கிளை துவங்குவதற்கான சாத்தியக் கூறுகள் அங்கே இல்லை.

**ஏ.ஜெ.மணிக்கண்ணன்:** நான் ஏற்கெனவே சொன்னதுபோன்று, உளுந்தூர்பேட்டை நகரப் பகுதியிலுள்ள வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் 22 கிராமப் பஞ்சாயத்துகளும், ஒரு நகராட்சி பகுதியும் அதில் பயன்பெறக்கூடிய வகையில் அந்த வங்கி இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்தக் கிராமத்தில் ஒரே இடத்தில் இத்தனை கிராமப் பஞ்சாயத்துகள் வந்து பயன்பெறுவது என்பது மிகவும் சிரமமாக உள்ளது. அதனை இரண்டாகப் பிரிப்பதற்கு அரசு முன்வருமா

அடுத்து, நமது தமிழக முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நமது வருவாய் துறை அமைச்சர் அவர்களும், எங்கள் மாவட்ட பொறுப்பு அமைச்சர் அவர்களும் நேற்றையதினம் உளுந்தூர்பேட்டையிலுள்ள அரசு சாரா நிலத்திற்கு பட்டா வழங்க வேண்டுமென்று அறிவித்து இருக்கின்றார்கள். அவர்களுக்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றியையும், வணக்கத்தினையும் தெரிவித்துக்கொள்கிறேன். நீண்டநாள் பிரச்சினையாக இருந்ததை நிறைவேற்றி தந்தமைக்கு, பணிவன்புடன் நன்றியை தெரிவித்துக் கொண்டு, இந்த கூட்டுறவு வங்கியை இரண்டாகப் பிரிப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன்:** உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்து, அதை LD bank ஆக இருக்க வேண்டுமென்பதை தவிர்த்து, 19 தொடக்க வேளாண்மை கடன் சங்கங்கள் இருக்கின்றன. மேலும், ஒன்று, இரண்டு தேவைப்பட்டால் தொடங்கலாம். அதைப் போல, நகர்ப்புற வங்கிகள் இருக்கின்றன. அவற்றினுடைய கிளைகளையும் துவக்கலாம். ஆகவே, LD bank என்பதை தற்போது திறப்பதற்கான சாத்தியங்கள் இல்லை. தேவைப்படின், புதிய வங்கிகள் அதாவது, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் தொடங்கப்படும் என்பதையும், உறுப்பினர் அவர்களின் விருப்பத்திற்கேற்றவாறு நிறைவேற்றி தரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# திருவாரூரில் சுகாதாரத்துறை சார்பில் வயிற்றுப்போக்கு தடுப்பு முகாம்!

## பூண்டி கே.கலைவாணன் -தலையாமங்கலம் ஜி.பாலு பங்கேற்பு!

*திருவாரூர், ஜூலை 3-*

*திருவாரூர்கொடிக்கால் பாளையம் குழந்தைகள் மையத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துவத்துறையின் சார்பில் வயிற்றுப்போக்கு தடுப்பு முகாம் 2024 மற்றும் வைட்டமின்யு முகாமினை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலைவாணன் தொடங்கி வைத்தார். மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ ஆகியோர் உடனிருந்தனர்.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி வயிற்றுப்போக்கு தடுப்பு முகாம் ஆகஸ்ட் 31 2024 வரை நடைபெறவுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிகள் மற்றும் நகரத்தை சுற்றி சிறப்பு கவனம் செலுத்தக்கூடிய முக்கிய இடங்களில் வைட்டமின்யு முகாம் இன்றைய தினம் (ஜூலை 01) முதல் 31ம்தேதி வரை (புதன் மற்றும் ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக) நடைபெறவுள்ளது.*

*அதனடிப்படையில், திருவாரூர் மாவட்டத்தில் வயிற்றுப்போக்கு தடுப்பு முகாமிற்காக தமிழ்நாடு மருந்துவப் பணிகள் சேவை கழகம் மூலமாக 77,090 ஓ.ஆர்.எஸ் பொட்டலங்களும் மற்றும் 4,00,131 ஜிங்க் மாத்திரைகளும் பெறப்பட்டு திருவாரூர் மாவட்டத்திலுள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் உள்ள 1,14,984 குழந்தைகளுக்கு வழங்கப்பட உள்ளது.*

*அங்கன்வாடி பணியாளர்களால் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு இரண்டு ஒஆர்எஸ் பொட்டலங்கள் மற்றும் 14 ஜிங்க் மாத்திரைகள்; விநியோகிக்கப்படும். அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் கிராம சுகாதார செவிலியர்கள் ஒஆர்எஸ் கரைசல் தயாரிப்பு தொடர்பான செயல் விளக்கத்தினை அளிப்பார். வயிற்றுப் போக்கு குறித்த எச்சரிக்கைகளை அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் கிராம சுகாதார செவிலியர்கள் நலவியல் மற்றும் சுகாதாரம் முக்கியத்துவத்தினை அனைத்து குடும்பங்களுக்கும் பயிற்றுவிப்பார்கள். மேலும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் புறநோயாளிகள் மற்றும் உள்நோயாளிகளுக்கு வயிற்றுப்போக்கிற்கு போதிய மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படுகிறது.*

*வைட்டமின் யு குறைபாட்டினால் பார்வை குறைபாடு, வயிற்றுப் போக்கு, தீவிர சுவாச தொற்று மற்றும் பள்ளி முன்பருவ குழந்தைகளிடையே நோய் வாய்ப்பட்டு குழந்தைகள் இறப்பதை தவிர்க்கும் பொருட்டு வைட்டமின் யு திரவம் வழங்கப்படு கிறது. வைட்டமின் யு திரவம் 6 மாதம் முதல் 60 மாதம் வரையிலான சுமார் 1,09,488 குழந்தைகளுக்கு வழங்குவதற்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. வைட்டமின் யு திரவம் 6 மாதம் முதல் 11 மாதம் வரையிலான குழந்தைகளுக்கு 1 மி.லி. அளவும் மற்றும் 12 மாதம் முதல் 60 மாதம் வரை குழந்தைகளுக்கு 2 மி.லி. அளவும் முகாம்களில் வழங்கப்படும்.*

*இந்நிகழ்வில்நகர்மன்றத் தலைவர் புவனப்பரியா செந்தில், நகர செயலாளர் வாரை. எஸ்.பிரகாஷ், மாவட்ட மருத்துவரணி கே.பி.ரமேஷ் குமார் மற்றும் அரசு அலுவலர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.*



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம், கஸ்பாகரணை, ஒரத்தூர் ஊராட்சிகளில் விக்கிரவாண்டி இடைத்தேர்தல் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா (எ) சிவசண்முகத்தை ஆதரித்து, விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி தலைமையில் வருவாய்த் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், மின்சாரத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் வீதி, வீதியாக உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளைச் சேகரித்தனர். சட்டமன்ற உறுப்பினர். சிந்தனைச் செல்வன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிட நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், ஒன்றியச் செயலாளர் ஜெ.ஜெயபால், ஒன்றியக் குழுத் தலைவர் சங்கீதா அரசி ரவிதுரை, ஒன்றியச் செயலாளர்கள். வே.கணேசன், கு.செல்வமணி, மாவட்ட கவுன்சிலர் மீனா வெங்கடேசன், ஒன்றியக் கவுன்சிலர்கள் இளவரசி ஜெயபால், சாவித்திரி பெருமாள், செல்வம், முன்னாள் இளைஞர் அணி எத்திராசு மற்றும் பலர் உடனிருந்தனர்.